செ.வெ.எண்:405 நாள்: 30.05.2008

செய்தி வெளியீடு

# எம்ஜிஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம், சென்னை-113-ல் பட்டயப் படிப்புகளுக்கான விண்ணப்பம் படிவம் வழங்கும் நாள் மற்றும் பூர்த்தி செய்த விண்ணப்ப படிவங்கள் திரும்ப பெறுவதற்கான கடைசி நாள் 12-06-08 என கால நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது

## செய்தி மக்கள் தொடர்புத்துறை அரசு செயலர் (பொ), திரு வெ. இறையன்பு, இஆப அவர்கள் தகவல்

இந்தியாவில் உள்ள திரைப்படத் தயாரிப்பு தொழில்நுட்பத்துடன் தொலைக்காட்சித் தயாரிப்பு நுணுக்கத்தையும் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்ற மூன்று முக்கியமான திரைப்படக் கல்லூரிகளில் தமிழக அரசால் நடத்தப்பட்டு வரும் **எம்ஜிஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம், சென்னை-113** எனும் நிறுவனம் இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் கீழ் இயங்கி வருகிறது.

இந்நிறுவனம் திரைப்படத் தொழில் நுணுக்கங்களையும் வீடியோ தயாரிப்பு உத்திகளையும் பயிற்றுவித்து வரும் முன்னோடி நிறுவனமாகும்.

இந்நிறுவனத்தில் *(1)*திரைப்பட இயக்கம் மற்றும் திரைக்கதை அமைத்து வசனம் எழுதுதல் (DIRECTION AND SCREENPLAY WRITING) *(2)* ஒளிப்பதிவு (CINEMATOGRAPHY) *(3)* ஒலிப்பதிவு *(ம)* ஒலிப்பொறியியல் (SOUND RECORDING AND SOUND ENGINEERING) *(4)* படத்தொகுப்பு (FILM EDITING) மற்றும் *(5)* படம் பதனிடுதல் (FILM PROCESSING) ஆகிய மூன்றாண்டு கால பட்டயப் படிப்புகளை பயிற்றுவித்து வருகிறது. மேற்கண்ட ஐந்து பட்டயப் படிப்புகளுடன் தொலைக்காட்சித் தயாரிப்பு தொழில் நுட்பங்களையும் பயிற்றுவித்து வருகிறது.

இந்நிறுவனத்தில் *2008-2009-*ஆம் கல்வியாண்டுக்கு மேற்கண்ட ஐந்து பட்டயப் படிப்புகளுக்கான மாணவ/மாணவியர்கள் சேர்க்கை தொடர்பான விளம்பரம் " The Hindu" மற்றும் " தினகரன்" ஆகிய நாளிதழ்களில் *11-05-08* மற்றும் *25-05-08* ஆகிய தேதிகளில் விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளது.

விண்ணப்பப் படிவம் மற்றும் விவரக் குறிப்பேடுகள் பெற விரும்புவோர் தேசிய மயமாக்கப்பட்ட ஏதேனும் ஒரு வங்கியில் சென்னையில் மாற்றத் தக்க வகையில் ரூ *30-*க்கான வங்கி வரைவோலையுடன் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கான ஜெராக்ஸ்

நகலுடனும் இதர பிரிவினர் ரூ 100-க்கான வங்கி வரைவோலையுடன் "PRINCIPAL, M.G.R GOVT. FILM AND TELEVISION INSTITUTE, CHENNAI-113" எனும் பெயரில் வங்கி வரைவோலையாக பெற்று சுயவிலாசமிட்ட ரூ10-க்கான அஞ்சல் வில்லை ஒட்டிய உறையுடன் " முதல்வர், எம்ஜிஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம், சிஐடி கேம்பஸ் தரமணி அஞ்சல், சென்னை-113" எனும் முகவரிக்கு அனுப்பியும் அல்லது நேரிலும் பெற்றுக் கொள்ளலாம்.

இந்நிறுவனத்தில் அனைத்து மாணவ/மாணவியர்களும் முதலாமாண்டு சேர்ந்து பயன் பெறும் வகையில் 2008-2009-ஆம் கல்வியாண்டுக்கான மாணவ/மாணவியர்கள் சேர்க்கை தொடர்பான விண்ணப்பங்கள் வழங்கும் நாள் 12-06-08 (திங்கள்கிழமை) மாலை 5.00 மணி வரையிலும் பூர்த்தி செய்த விண்ணப்பங்கள் திரும்ப பெறுவதற்கான கடைசி நாள் 12-06-08 அன்று மாலை 5.00 மணி வரை என கால கெடு நீட்டிக்கப்பட்டுள்ளது.

இது குறித்த விவரம் "www.tn.gov.in எனும் இணைய தளத்திலும் காணலாம்.

இத்தகவலை செய்தி மக்கள் தொடர்புத்துறை அரசு செயலர் (பொ), திரு வெ. இறையன்பு, இ.ஆ.ப அவர்கள் தெரிவிக்கிறார்.

முதல்வர்

Principal
M.G.R. Govt. Film & T.V. Institute

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை -9